ஸ்ரீ:                Regd. No. M. 4456.

ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி

# ஸம்ரக்ஷிணீ

ஸம்புடம் 6]                [ஸஞ் 7



ஸ்வபாநு                ஆடி

1943                ஜூலை

போஷகர் வருஷ சந்தா ரூ. 5—0—0

ஜீவித சந்தாதாரர் ரூ. 50—0—0

வருஷச்        [மாதப் பத்திரிகை]        சந்தா 2-0-0

ஸம்பாதகர்—பரவஸ்து ஸ்ரீநிவாஸாசாரியர்

S. No. ..........                சந்தா நெ. ..........

Sri.

SRI SAMRAKSHINI OFFICE, THILLAISTANAM. B.O. (VIA) TIRUVADI

ஸ்ரீ:

# விஷய அட்டவணை.


| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீமந்நாதமுனிகளும் ஸ்ரீதேசிகனும் | 319–322 |
| 2. | பரமதபங்கம் | 323–326 |
| 3. | மதுராலாபம் | 326–330 |
| 4. | ஆசார்ய நிஷ்டை | 331–336 |
| 5. | ஸ்ரீயாதவாப்யுதயம் | 259–262 |
| 6. | ஆசார்ய நிஷ்டை (ராப்பர்) | 3–4 |


## 40-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் உத்ஸவம்.

ஸ்ரீ அஹோபிலமட திவ்யாஸ்தானத்தில் 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீமத் சடகோப ஸ்ரீரங்க ஸ்ரீசடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடையவார்ஷிக மஹோத்ஸவமானது துவரிமான் ப்ருந்தாவனத்தில் அதிகவிமரிசையுடன் கொண்டாடப்பட்டது. தினப்படி மூலபேர, உத்ஸபேரங்களுக்கு ஸ்நபனத் திருமஞ்சனமும், வீதிஉத்ஸவங்களும் வேதபாராயண அத்யாபககோஷ்டிகளும் ததியாராதனமும் மிகவும் அழகாய் நடந்தேறின. இதாநீம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீமத் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் இந்த துவரிமான் ப்ருந்தாவனக் கட்டிட பூர்த்தியை உத்தேசித்து ஸாதித்தருளிய ரூ ஐநூறையுங்கொண்டு திருப்பணி ஸமீபத்தில் பூர்த்தியடைந்தது. ஸ்ரீ ஸுந்தரராஜதாஸன்.

---

### ஸ்ரீராமஸ்தோத்ராதி புஸ்தக விமர்சம்.

[illegible]

ஸ்ரீ:

# "ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தி ஸம்ரக்ஷிணீ"

(ஓர் மாதப் பத்திரிகை.)

ஜீவநம் ஜகதாம் ஜீயாத் நிகமாந்தஸரஸ்வதீ ।
ஸ்வாதுஜம் ஸர்வகர்ணேஷு பேக்ஷதேஶாஶ்வயம் ஹரி: ॥

| ஸம்புடம் 6 | ஸ்வபாநு வருஷ ஆடி மீ | ஸஞ்சிகை 7 |
|---|---|---|

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ।

## ஸ்ரீமந் நாதமுனிகளும் ஸ்ரீ தேசிகனும்.

சென்ற ஆனிமீ ஸ்ரீமந்நாதமுனிகளின் அவதாரத் தால் ஜ்யேஷ்டமா (சிறந்ததா) கும். ஸ்ரீதேசிகன் இவ்வா சார்யவர்யரிடம் அடங்காக் காதல்கொண்டவரென்பது ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்திகளால் வெளியாகின்றது.

'நாதேந முநிநா தேந பவேயம் நாதவாநஹம் ।
யஸ்ய நைகமிகம் தத்த்வம் ஹஸ்தாமலகதாம் கதம் ॥'

(பொ-ள்) மறையில் மறைந்திருக்கும் தத்வம் எவருடைய திருக்கையில் நெல்லிக்கனி போலாயிற்றோ அந்த பகவத் தியானம் செய்பவர்களில் தலைமை பெற்ற ஸ்ரீமந் நாதமுனியாலடியேன் ஸநாதன். அதாவது—ரக்ஷகரைப் பெற்றவன்.

(தா-ம்) வேதத்தின் உண்மையைக்கண்டு உபதேச பரம்பரையால் நமக்குக் கிடைக்கும்படியையும் 'பொய்கை முனி ....செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே' என்றபடி

அதில் வரும் ஸம்சயங்களைத் தெளிவதற்குத் தமிழ்மறை தந்தருளியும் ரக்ஷித்தபடியையும் துணைச் சொல் ஒன்றுமின்றி ஒப்புயர்வற்று விளங்கும் "நாதன்" எனும் திருநாமமே நமக்கு அறிவிப்பதால் இவரே எவருக்கும் நாதன். இதனால் ஸ்ரீநாதனுக்குச்சொந்தமாயினும் இத்திருநாமம் ரூடி(இடுகுறி) போலாயிற்றென்று திருவுள்ளம். இதுவரை இவன் செய்தருளிய அவதாரங்களில் கடைசியான கீதாசார்யன் (கிருஷ்ணாவதாரத்தில்) 'அவஜாநந்தி மாம் மூடா:' அறியாதவர் என்னை அவமதிக்கிறார்கள் என்றன்றோ அருளியது. ஆசார்யபரம்பரையை அநுஸந்திக்கும்வழியை உபதேசிக்கும் ஸ்ரீதேசிகன் 'ஏதே மஹ்யமபோட மன்மத சரோன்மாதாய நாதாதய:'' என்று ஸ்ரீமந் நாதமுனிகள் ஆசார்ய வர்யர்களின் தலையிலிருப்பதைக் கூறினார். "நாதோபஜ்ஞம்... இதமகிலதம:கர்சனம் தர்சனம் ந:" மத்தியில் மறைந்திருந்த நம் தர்சனத்தை தர்சனம் செய்தருளிய பெருமை நம் நாதமுனிகளைச் சேர்ந்ததென்றார்.

காளம் வலம்புரியன்ன நற் காதலடியவர்க்குத்
தாளம்வழங்கி தமிழ்மறை யின்னிசை தந்த வள்ளல்
மூளுந் தவநெறிமூட்டிய நாதமுனி கழலே
நாளுந்தொழு தெழுவோம் நமக்கார் நிகர்நாநிலத்தே,

காளம், சங்கம், போன்றவரும் நல்ல பக்தர்களுமான 'மேலையகத்தாழ்வான்' 'கீழையகத்தாழ்வான்' என்னும் மருமக்களான இரு சிஷ்யர்களுக்குத் தாளத்துடன் தமிழின் இனிமையுள்ள கானத்தைத்தந்த பரமோதாரரும் மிக்க தவமான மோக்ஷோபாயங்களை மூட்டியவரும் கன்றுகள் போல் வரும் அடியார்களுக்கு ஊட்டியவருமான ஸ்ரீமந் நாதமுனிகளின் ஸ்ரீபாதங்களை தினந்தோறும் தொழுதெழும் நமக்கு நிகர் இவ்வுலகில் எவருமில்லையென உத்கோஷிக்கிறார் நம் ஸ்ரீ தேசிகன்.

# ஸ்ரீமந்நாதமுனிகளின் சரித்ரம்

வீரநாராயணபுரமென்றும் காட்டுமன்னார்கோவிலில் கலி ௩௲௮௫-வதான சோபகிருது௵ ஆனி௴ அநுஷத்தில் சொட்டைக் குலத்தரசான ஈச்வர முனிவருக்குக் குமாரராக அவதரித்தவர் ஸ்ரீமந்நாதமுனிகள். இவர்பிறவியிலிருந்தே பெருமாளிடம் பக்தியோடு ஸர்வசாஸ்த்ர பாரங்கதராய் அந்த ஸ்தலத்தில் கோயில்கொண்டிருக்கும் மன்னனாரைத் தொழுது தேவியாரான அரவிந்தப் பாவையோடு அங்கெழுந்தருளியிருந்தார். அவர் குமாரர் ஸ்ரீஈச்வரமுனிகள்? இவர்கள் பரம்பரையாய் யோகநிஷ்டர்களாகையால் முநிகளென்று சொல்லப்படுகிறார்கள். ஸ்ரீமந்நாதமுனிகள் ஸகுடும்பராய்த் தீர்த்தயாத்ரை செய்து ஸ்ரீகோவர்த்தனத்தில் யமுனைத்துறைவனை ஸேவித்து சிலநாள் தங்கியிருந்து பின்பு ஸ்ரீரங்கம்வரையுள்ள திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்தருளி மீண்டும் காட்டுமன்னார் ஸந்நிதி சேர்ந்து அங்குள்ளவர் கொண்டாட மன்னனாருக்குப் புஷ்பகைங்கர்யம் செய்துகொண்டெழுந்தருளியிருந்தார். அப்போது அங்கு வந்த திருநகரி ஸ்ரீவைஷ்ணவர்கள் 'ஆராவமுதே' என்ற திருவாய்மொழியை அநுஸந்திக்க அதைக் கேட்ட ஸ்வாமி நாதமுனிகளும் பக்தியோகத்தில் பகவதநுபவத்திலும் அதிக ஆநந்தத்தை யநுபவித்துக் கடைசிப்பாட்டில் ஆயிரத்திலிப்பத்து என்றதைக் கேட்டு ஆவலோடு மீதியை அறியோமென்ற அவர்களோடு திருக்குடந்தை சேர்ந்து ஸ்ரீஆராவமுதத்தை அத்திருவாய்மொழியைக் கொண்டு அநுபவித்து அங்கும் மீதிபெறாது ஆழ்வார்திருநகரி சேர்ந்து 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்னும் மந்த்ரத்தை ஸ்ரீமதுரகவிகள் வம்சத்திலுதித்த ஸ்ரீபராங்குசதாஸரென்பவரிடம் பெற்றுப் பன்னீராயிரம் ஜபித்து ஸ்ரீநம்மாழ்வாரை ஸாக்ஷாத்கரித்து திருமந்த்ரம் வ்யாஸஸூத்ரம நாலாயிர ப்ரபந்தம் ரஹஸ்யங்கள். இவைகளை அர்த்தத்துடன் கேட்டார். முன் திருமங்கைமன்னன் செய்தது

போல் நம் ஆழ்வாரை ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளப் பண்ணி திருவத்யயனோத்ஸவம் நடத்தி வைத்தார். மருமக்களைக்கொண்டு ஸ்ரீரங்கத்திலும் மன்னார்ஸந்நிதியிலும் தாளத்துடன் தமிழ்மறையின்னிசை பாடுவித்தார். இது உலகிலெங்கும் பிரஸித்தமாயிற்று. இப்படி முன்னூற்று நாற்பது வருஷங்களெழுந்தருளியிருந்தார். இவரைத் தன் அருகிலழைத்துக்கொள்ள ஆவல்கொண்ட அச்சுதன் ஸீதாலக்ஷ்மண ஹநுமத்ஸமேதராய் ஸ்வாமி திருமாளிகையில் பெண் பிள்ளைகளிடம் சீக்கிரம் வரச்சொல்லுங்களென்று சொல்லிச்செல்ல 'காணுமாறருளாய் காகுத்தா' என்று புலம்பிக்கொண்டு தேடிச்சென்று குருகைகாவலப்பன் ஸந்நிதியில் ஸ்ரீசக்ரவர்த்தித்திருமகனை பிராட்டி, இளையபெருமாள் திருவடியோடு ஸேவித்து 'என்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்றபடி திருநாட்டுக்கெழுந்தருளினார். குருகைகாவலப்பன் (சிஷ்யர்) முதலானோர் குமாரரைக் கொண்டு அங்கு ப்ரஹ்மமேதஸம்ஸ்காரம் செய்வித்து மன்னார்ஸந்நிதியில் மற்ற கைங்கர்யங்களை பாக்கச் செய்தார்கள். இவ்வுலகிலுள்ள ஸ்ரீவைஷ்ணவரெல்லாம் இவருடைய க்ஞானவம்சத்தில் பிறந்தவரே. திருமேனிஸம்பந்தமுள்ளவரும் பலரிருக்கிறார்கள், ஸ்வாமியின் உத்ஸவத்தை ஸேவிக்கும்படியான பாக்யம் இப்போதுதான் கிட்டியது. ஆயினும் 'நமக்கார் நிகர் நானிலத்தே' என்று நாமும் தொழுதெழுவோம்.

ஸ்ரீமந்நாதமுநிகள் பெருமானைத்தேடியோடும்போது கண்டதாகச் சொன்னவிடம் கண்டமங்கலம் பூமகளாரின் திருக்குழலிலிருந்து பூவிழுந்தவிடம் பூவிழுந்தவூர். திருவடியின் அடி கண்டவிடம் குரங்கடி மூர்ச்சித்தவிடம் மூர்ச்சித்தமாமடம் என்றுஞ்சிறிது திரித்துக்கூறப்படுகிறது. அங்கங்கு ஸந்நிதிகளுமிருக்கிறன.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம: ।

# பரமத பங்கம்.

(T.E. சடகோபாசாரியார், அட்வகேட், திருப்பாப்புலியூர்.)

ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகர் அருளிச்செய்த ‘பரமத பங்கம்’ என்கிற ரஹஸ்யத்தில்—

**‘கோதவமொன்றில்லாத தகவே கொண்ட கொண்டலென வந்து உலகிலிவர்க்கென்றோர், தூதுவனுயொரு கோடி மறைகளெல்லாந்தொடர்ந்தோடித் தனியோடித் துயரந் தீர்த்த, மாதவனுர் வடகொங்கில் வானியாற்றின் வண்ணிகை நன்னடங்கண்டு மகிழ்ந்து வாழும்போது, இவை நாம் பொன்னயிந்தைநகரின் முன்னுள் புணராத பரமதப்போர் பூரித்தோமே.’**

என்கிற பாசுரத்தில் இந்த க்ரந்தம் எவ்விடத்திலருளிச்செய்யப்பட்டதாக குறிக்கப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி ஸம்சயம் ஏற்பட்டிருப்பதால் அது விஷயமாகச் சில அம்சங்கள் சொல்லவேண்டியதாகிறது ஸம்ஸ்க்ருதபத்யரூபமாக ஸ்ரீ தொட்டையாசாரியர் ஸாதித்திருக்கும் நம்மாசார்யனது வைபவ ப்ரகாசிகையிலும் அதையநுஸரித்த மணிப்ரவாள வைபவ ப்ரகாசிகையிலும் ஸ்ரீப்ரகாலஸ்வாமி அருளிச்செய்த குருபரம்பராஸாரத்திலும் இந்த க்ரந்தம் திருவஹீந்திரபுரத்தில் ஸ்வாமி யெழுந்தருளியிருக்கையில் அருளிச்செய்ததென்பது ஸ்பஷ்டமாய்க் கூறப்பட்டிருக்கிறது. இப்பாசுரத்திலும் ‘பொன்னயிந்தைநகரின் முன்னுள் புணராத பரமதப்போர் பூரித்தோமே’ என்றிருப்பதுமிதற்குஸம்வாதமாகிறது. அப்படிக்கிருந்தும் ‘வடகொங்கில்வானியாற்றின் வண்ணிகை நன்னடங்கண்டு மகிழ்ந்துவாழும்போது பூரித்தோமே’ என்று அன்வயிப்பதுதான் யுக்தமென்றும் அப்படி

யாகில் திருவஹீந்திரபுரத்தில் முன்னொருகாலத்தில் பூர்த்தி யாகாத இந்த க்ரந்தத்தை வடகொங்கில் வானியாற்றின் அதாவது—மைஸூர் ப்ராந்தத்தில் பவானீ நதிக்கரையில் பூர்த்திசெய்தோம் என்றுபொருள்கொள்ளவேண்டும் என்று சிலர் ஆக்ஷேபம் செய்வதாகத் தெரிகிறது. இது எல்லோரும் நிஸ்ஸம்சயமாய் ஒப்புக்கொண்டிருப்பதற்கு விரோதிப்பதாலும் மற்ற ஸந்தர்பத்திற்கு இசையாததாலும், 'மாதவனார்' என்கிற பதம் அந்வயிக்காததாலும் இதை தீவ்ரமாகப்பராமர்சிக்கவேண்டியதவசியமென்று நினைத்து யோசித்தவளவில் பெரியோர்களால் உதாஹரிக்கப்பட்டுள்ள ஒரு ஐதிஹ்யம் ஞாபகத்துக்கு வந்தது. அதாவது—திருவஹீந்திரபுரத்தில் நம்மாசார்யனெழுந்தருளி யிருந்தகாலத்தில் அதற்கருகாமையிலுள்ள தக்ஷிணவிநாகினீ நதியின் தீரத்திலிருக்கும் பல கிராமங்களில் ஜைனமதஸ்தர்கள் அதிகமாக இருந்தார்கள். அவர்களில் தமிழ் வித்வான்களும் தம்மதவிஷயங்களில் தேர்ச்சியுடையவர்களும் அநேகருண்டு. இவர்கள் ஸ்ரீதேசிகனுடைய கீர்த்தியைக் கேட்டு மிகப்பொறாமை கொண்டவர்களாய் இவருடன் தமிழில் வாதம்செய்து ஜயிக்கவேண்டுமென்று நினைத்து ஒருக்கால் ஸ்ரீதேவநாதன் தைமீ 5உ ஹஸ்தாஸாக்ஷியம் விநாகினியில் நேருகிறதென்பதைப்பற்றி தீர்த்தோத்ஸவம் கண்டருளும் ஸமயத்தில் பெருமாளுடன் அநுயாத்ரை செய்துவந்த ஆசார்யனைச் சூழ்ந்துகொண்டு வாதத்துக்கழைத்தபோது ஆசார்யன் அவர்களை வாதத்தில் தோல்வியடைவித்தார் அவ்வாதத்தின் ஆநுபூர்விதான்பிறகு பரமதபங்கரஹஸ்யரூபமாய் அமைக்கப்பட்டது. இவ்வரலாற்றை மனதில் வைத்துக்கொண்டு இப்பாசுரார்த்தத்தைப் பராமர்சித்தால் ஸம்சயமற விஷயம் ஸ்பஷ்டமாகிறது. 'வடகொங்கில்' அதாவது-மைஸூர் ப்ராந்தத்திலுண்டாகும், வானியாற்றின் விநாகிநீநதியின். ஸமுத்ரத்திலிருந்து ஸ்வாதீஸமுத்ரம் நிஷ்க்ரமமானது போல விநாகிநீ ஸமுத்ரத்திலி

ருந்து விநாகிநீஸ்ஸூமேற்பட்டதாகையால் இரண்டும்ஸமா னார்த்தமுடைத்தானதைப்பற்றி விநாகிநியை ஸவாநியின் திரிபாக வானிசப்தத்தால் நிர்தேசிக்கத்தட்டில்லை. வண் ணிகை நன்னடங்கண்டு வாழும்போது...லயத்தோடு கூடிய அழகியநாட்யத்தைப்பார்த்து ஆனந்தப்பூரிப்படைந்தபோது தைமாதத்தில் பெண்ணையாற்றில் வெண்மையான மணல்மீது ஸ்வர்ணஸூாயையான தெளிந்த ஜலம் சிறுகிளைகளாகப்பிரிந்து சிலுசிலுவென்று சப்தித்துக்கொண்டு பெருகுவதை ஒரு ஸுந்தரியான நடீ வெண்மையான கம்பளம்விரித்த மேடை மேல் சிலம்பு சப்தத்துடன் நர்த்தனம் செய்வதற்கொப் பாகக் கூறுவது யுக்தமேயாகும். இந்தஸந்நிவேசத்தைநேரில் கண்டவர்கள் இவ்வுவமையின் ஸௌஷ்ஸ்யத்தையுகப்பார்கள். அவ்வுத்ஸவத்தில் பெருமாள் அவபிருதங்கண்டருளினபிறகு விநாகிநீதீரத்தில் வாஸுவதேவனாகத் திருக்கோலங் கொண்டுலாவுமவஸரம் இங்கு நிர்தேசிக்கப் பட்டதாகும் பெருமாளுக்குப்பின்னால் வேதபாராயணகோஷ்டி செல்வதை 'ஒரு கோடி மறைகளெல்லாம் தொடர்ந்தோட' வென்று ஆசார்யன்குறிக்கிறார் போலும். 'மாதவனார்நன்னடங்கண்டு வாழும்போது' என்றதால் பெருமாள் ஆற்றங்கரையிலெழு ந்தருளியிருக்கும்போது அவ்விடத்திலேயே அவரது முன் பாகவே பரமதப்போர் புரியப்பட்டதென்று தெரிகிறது. இங்கு வர்ணனப்ரகாரத்தை நோக்குமிடத்து விநாகிநீ தீரத்தில் தமக்குவிஷயதமையான சுவஞ்சமூர்த்தியுலாவுவதை ஸேவித்தவளவில் ஆசார்யனுக்குத் தனக்குகப்பானவிஹவா வதாரமாகிய ஸ்ரீமொவாஸுதேவ யமுநாதீரத்தில்விஹரிப்பது ஸ்ம்ருதிவிஷயமாயிற்றுப்போலும் அல்லதுபாண்டவதூதனை யமுநா தீரத்தில் ப்ரதிஷ்டிதமான ஹஸ்திநாவநத்துக்கு ஸமீபமாக சென்ற சுவஸரம் ஸ்ம்ருதிஜாதமாயிற்றென்றும் கொள்ளலாம். 'முன்னாள் புணராத பரமதப்போர்' என்ற தால் இதற்குமுன்னெல்லாம் சுவைதிகள் முதலிய வெவதிக

மதஸ்தர்களோடு வேதாந்த விசாரரூபமான வாதங்கள் தேவஸபையில் ஸ்ரீ ராஜஸபா ஶாஸ்த்ரமுறைப்படி நடைபெற்றன. இப்போது அவ்விதமில்லாமல் வேதஶாஸ்த்ரப்ரயோகத்துக்குட்படாத லௌகாயதபௌத்தஜைநாதி பாஷண்டவிவாதங்களுடன் தேவஸபையில் வாதம் நடந்ததென்கிற வைலக்ஷண்ய ப்ரதிபத்தி தவிரவும் முன்பு நடந்த வாதங்கள் முன்னாடியே ப்ரதிவாதிகளால் அறிவிக்கப்பட்டு காலம் இடம் குறிப்பிட்டு சாஸ்த்ரீயமாய் நடந்தேறின. அப்படிக்கில்லாமல் இந்த விவாதங்கள் யத்ருச்சையாயாற்றங்கரையில் வந்து சூழ்ந்து கொண்டனவென்பதும் ஸூசிக்கப்பட்டது. பாண்டவதூத்யம் இங்கு ப்ரஸ்தாவிக்கப்பட்டதால் யமுனாதீரத்திலுள்ள ஹஸ்திநாபுரத்தில் துர்யோதனஸபையில் பகவாந் எழுந்தருளியிருந்தபோது திடீரென்று அவரை ரஜோவிஷ்டர்களான தார்த்தராஷ்ட்ரர்கள் பந்தநம் செய்ய யத்தனித்தபோது பகவாந் விஶ்வரூபத்தை ப்ரதர்ஶநம் பண்ணி துர்ஜநர்களான ஶத்ருக்களையெல்லாம் மயங்கி விழும்படி செய்தபடியே இப்போது ஆசார்யன் தத்த்வவாதிகளான பாஷண்டிகள் தம்மை திடீரென்று வாதத்துக்கு அழைத்து ஜயிக்க வெண்ணங்கொண்டபோது அவர்களைத் தமது ஸூக்ஷ்மதபோஶக்தியால் தோல்வியடைவித்தாரென்பது த்வனிக்கிறது. 'வாமும்போது இவை பரமதப்போர் புரித்தோம்' என்றதில் 'இவை' என்று முன் பேசப்பட்ட ப்ராக்தநவாதவிஷநிர்தேஶிக்கப்பட்டது. (தொடரும்)

---

# மதுராலாபம்.

S. T. ஸ்ரீநிவாஸாசாரியார் M.A., வித்வான் L.T.

வத்ஸா! வா! உட்கார்! உன்னைக்கண்டு இந்த உலகம் நகைக்கிறதென்று நீ வருந்துகிறாய். உன்னை உற்று நோக்குகிறார்கள் பிறர்! உன்னைச் சுட்டிக் காட்டி நிற்கிறார்கள். நீ அழகில்லையென்றோ, விலக்ஷணமென்றோ, விசித்ரமென்றோ வாழ்க்கையில் துரதிர்ஷ்டசாலியென்றோ அவர் நகை

ப்பு! இதற்காக ஓடி ஒளிந்து உன்னை ஒருவரும் மதிப்ப தில்லையென்றும், விசேஷித்து நகையாடுகிறார்களென்றும் வருந்தப் போகிறாயா? ஐயோ! குழந்தாய்! உன்னை ஒருக் கணமும் விடாமல் நினைப்பவனும் நீ இல்லாவிடில் தானே இல்லாதவனாகவும் நினைப்பவன் ஒருவன் உளன் அவனே ஸ்ரீமந் நாராயணன்!

இவ்வுலகில் நீ தன்னந்தனியே இருக்கிறாயா? மஹாத் தான பாவம் செய்தவனாக உணருகிறாயா? அது காரண மாக உன் மனதில் பெரும் ரஹஸ்யங்களைச் சுமந்து திரி கிறாயா? உன் உடலில் பிறர் இகழும் வியாதியைத் தரித்து நொந்தாயா? உன் இவ்வளவு ரஹஸ்யங்களையும் அறிந்து விளங்கும் ஸர்வக்ஞன் ஒருவன் உண்டு. உன் மனதில் உள்ள ஒவ்வொரு உணர்ச்சியும், கொதிப்பும், துயரும், வீழ்ச்சியும் அவனது ஸங்கல்பாதீனமாக, அங்கு உதித் தன என்பதை மறந்தாயோ. ஏதோ கார்ய விசேஷத்தை ஸாதிப்பதற்கே அவைகள் கிளப்பப்படுகின்றன. காரியம் முடிந்தவுடன் இருந்த இடம் தெரியாமல் மறையும்! நீ எது செய்த போதிலும் உன்னை முற்றும் உணர்ந்தறியும் முக மொன்று நோக்கிக் கொண்டே இருக்கிறதென்பதை யறிந்தும் நீ தனியாயிருப்பதாக உணரலாமா? அந்தத் திருநோக்கிலிருந்து நடுநடுங்கி நீ ஓடலாம், மறைய முயல லாம். அதைத் திருப்பித் தைரியமாய் பார்க்கக் கற்றுக் கொண்டாயானால் அதில் எல்லையற்றகருணையையும் நீதியை யுமே காண்பாய்! ஆகையால் நீ அகதியல்ல! சக்ரவர்த்தி!! உன்னுடைய ஸமான ஸ்கந்தர்களிடையில் செல்வாக்கும் சிறப்பும் வாய்ந்தவனாக விளங்க விரும்புகிறாய். உன்னு டைய பராஜயங்களை நினைத்து நினைத்து மனம் மறுகி "ஐயோ இவர்கள் காண நாம் தாழ்வதே" என்று இரங் குகிறாய். நாம் இன்னும் அதிக அழகுடனும், வாக்சாதுர் யத்துடனும், செல்வத்துடனும் இருக்கப் பெற்றிலோமே என்று புழுங்குகிறாய்! உன் இச்சைகள் நிறைவேறின்! என்ன வந்துவிடப் போகிறது. ஸத்ய ஸங்கல்பனும் கருணாநிதியுமான கண்ணன் உன்னை இப்படியிருக்கத் திருவுள்ளம் பற்றியபொழுது நீ அவனுடைய ஸங்கல்

பத்தை மீறி வேறு ஒன்று ஆசாஸிப்பது உன் ஸ்வரூப மாகுமா? நீ இன்னும் அழகாயிருப்பின் என்? இன்னும் வாக்மியாகில் என்? உன் செல்வத்தைக் கண்டு பிறர் பேசி என்? நீ வருங்கால் யாவரும் வாய்புதைத்து உடல்வணங்கி வணங்கியென்? உலகில் எத்தனை ஏழைகளும் அகதி களும்நோயாளிகளும் உண்டு? அவர்களுக்குச் சிறிதும் பயன்படாத உன் செல்வமும் சீரும் என்ன பயன்? அது கிடக்கட்டும் தம்பி! அதோ உடலெல்லாம் அழுகி அங்கங் கள் குறைந்த குஷ்டரோகிகளுக்கிடையில் கிடந்து இவர் கள்படும் பரிதாபம் என்னவென்று அளந்து பாடு பட்டுப் பரிதவிக்க நினைப்பாயோ!! மாட்டாய்! மாட்டாய்! பட் டாடை உடுத்துப் பல்கலன் பூண்டவர்கள் நிலைமையை மாத்திரம் நினைத்து ஏங்குவாய்!! பெரும்பாலும் செல்வ மெல்லாம் ஏழைகளையும் அகதிகளையும் நிரர்கள் மிதித் துத் தள்ளித் துவைத்துப் பெற்றதேயாகுமே!

வத்ஸா! குரூபியாயும் மதிப்பாரில்லாதவனாகவும் இரு க்கும் இன்பத்தை என்னவென்று சொல்வது? நீ பெற விரும்பும தனமானது இன்பமற்றது. உனக்கு விசிஷ்ய, துன்பமே தருவது. உன் ஸ்வரூபத்தைப் பரிப்பது உன் மனக்கண்ணை மறைப்பது உன் மனத்தைக் கல்லாக்குவது உன் வாழ்க்கையை நரகமாக்குவது! உலகில் யாவராலும் இகழப்பட்டுக் கீழ்க்கடையில்மதிப்பாரற்று, பேசுவாரற் றுத் தேற்றுவாரற்று நீ கிடக்க விரும்பின் எத்துணை இன்பம்!! எத்துணை ஸ்வரூபலாபம்!! மனிதன் உன்னைக் கை விட, மாதவன் உன்னைக்கைப் பிடிப்பான். மனிதன் முன் நீ தாழத்தாழ ஸ்ரீமதுஸூதனின் முன் உயர்வாய்!!

தம்பி! தங்கத்தைவிட ஈயம் குறைந்ததா? பருக் கைக்கற்கள் நக்ஷத்ரத்தைவிடத் தாழ்ந்தவையா? ஸ்ரீமந் நாராயணனது படைப்பிலுபயோகமற்ற பதார்த்தமென் பதே கிடையாதே. உபயோகமில்லாத பதார்த்தம் உண்டு என்றால் அவனது ஸர்வக்ஞத்வ மென்னவாயிற்று? உன் தாழ்மையும் துயரும் இன்றியமையாதவையே! கறுத்த வானில்தானே நக்ஷத்திரங்கள் நன்கு மிளிரும்!!

இந்த இருண்ட பாபம் நிறைந்த உலகில் நாற்புறமும் தன்னை எதிர்பார்த்து நிற்பார் யார் என்று தாமோதரன்

தேடியலேகிறான். அவன் வருங்காலத்தில் நம்முடைய வடிவழகு அவனை மயக்காது. நம்முடைய வாக்சாதுர்யம் உம்மை மயக்காது. நம்முடைய தூய பட்டாடைகளும்பல்கலனும் அவனுடைய திவ்ய ஸங்கல்பத்தை எள்ளளவும் மாற்றாது. அவனுக்கு என்ன திவ்யோபஹாரம்வைத்திருக்கிறாய்? இரத்தினகம்பளங்கள் விரித்து முத்துத்தோரணங்கள் கட்டிய மண்டபங்களைக் காட்டி அவனை மயக்கமுடியாது. அன்பு ததும்பும் உன் உள்ளத்தை அவனுக்கு அளிக்கச் சித்தமாயிரு. இருட்டில் நடந்து வருவான்! முட்களின்மேல் தன் சரணாரவிந்தங்கள் பட்டு நோவ விரைவான்! துர்க்கந்தத்தை ஸஹிப்பான்! கர்வம் பொறுமை கொடுமை இவைகளையெல்லாம் மதியாது உன்பக்கலில் உன் அன்புக்கோயில் உள்ளத்தை மதித்து வந்து நின்று பேசுவான்! அழுவான்! சிரிப்பான்! ஆடுவான்-பாடுவான்! தேற்றுவான்! உன்னிடம் டாம்பீகமும் துவேஷமும் அழுக்கும் இருப்பின் அவனை உன் பணத்தையும் வீண் மணத்தையுங்காட்டி ஏமாற்ற முடியுமா? ஆத்மாவிற்கு ஆனந்தவெள்ளம் நம் தேவாலயங்கள் பரிதபிக்குமாத்மாவுக்கு ஸ்ரீதேவஸேவை சைத்யோபசாரம். நமது திவ்யாலயங்கள் சாச்வதமாய் வாழ வேண்டுமல்லவா? அவைகள் உயிருடன் நிற்கவேண்டியது நம் ஆத்ம லக்ஷ்யமல்லவா? பல்லாயிரக்கணக்காய் பசியாலும் இழிவாலும் வருந்தும் இவர்களுக்கு நாம் நம் சக்தியனுஸாரமாக ஊட்டும் அன்னமும் அளிக்கும் ஆதரவும் நம் தேவாலயங்களுக்கு திவ்யசக்தி! நித்ய பலம்! இல்லாவிடில் மதில்வழியில் இருந்தஸ்ரீவைஷ்ணவரது வீட்டை இடிக்காமல், மதிலைச்சுற்றி அவர்வீட்டிற்கு ஏதும் எதமில்லாமல் திருமங்கைமன்னன் ஸ்ரீரங்கத்தில் திருப்பணிசெய்வாரா? அல்லது திருவரங்கனுக்குக் காவல் அந்த ஸ்ரீவைஷ்ணவனேயன்றி மதிளல்ல என்றும் திருவாய்மலர்ந்தருளியிருப்பாரா? மதிள்களா மாதவனுக்குக் காப்பு? ஏழைகளையும் தீனர்களையும் நோயாளிகளையும், நம் ஸ்ரிய:பதியே, படைத்தது என்பதை மறந்தாயோ! அல்லது நமக்குக் கொடுக்கப்பட்ட தனம், அவர்களைக் காப்பாற்றவோ அளிக்கப்பட்டதென்

பதும் நீ அறியாததோ! உன் சக்திக்கனுகுணமாக நீ பிறர்க்கும் கொடுக்கக்கடமைப்பட்டிருக்கிறாய். மாதவனை அடைய உனக்கு ஒருவழி உண்டு விச்வாஸம், பாரதந்த்ர்யம், அன்பு இவைகள் அந்தமார்க்கத்தில் மிளிரும் ரத்ன தீபங்கள் !!

வாழ்க்கையில் ஜயமே வேண்டு மென்கிறாய்! அபஜயத்தை நீ யாருக்குக் கொடுக்கவிரும்புகிறாய்? தோல்வியில் துன்பம் உண்டு. அத்துன்பத்தை மதியாது முயன்று வாழ்வது வெற்றியாகுமா தோல்வியாகுமா?

வாழ்க்கையில் பணம் வேண்டுமென்கிறாய். ஆத்ம குணங்களும் அச்சுதன் பாற்காதலும் ஓர் மஹாநிதியல்லவா? இந்தநிதி உள்ளவன், ஸாமான்ய த்ரவ்யத்தை த்ரவ்யமாய் மதிப்பானா? தம்பி! ம்ருகங்களிடமிருந்து பொறுமையையும் கடமையையும் தெரிந்துகொள்ளலாமென்று தோன்றுகிறது. எரிக்கும் வெய்யிலில் மூட்டை மூட்டையாய் அடுக்கிய பெரும்பளுவைக் குனிந்து தள்ளாடி மணிக்கணக்காக இழுத்து மறுக்கும், மாடுகள் தங்கள் இன்பத்திற்கா உழைக்கின்றன! ஓ ஓ என்று கதறிக்கசாப்புக் காரனது பிடியிலகப்பட்டு நம்மை இரு கண்களாலும் பார்க்கும் ஆடுகளின் பார்வை உண்டே!! அதில் எவ்வளவு மனுஷத்தன்மை இருக்கிறது. ''நன்றியற்ற மனிதனே, உன்னால் படைக்கமுடியாத ஒரு உடலை அழிக்கமுயலும் பேயே'' என்று சலித்து நமக்கு அன்பை உபதேசிப்பது போலிருக்கிறதல்லவா?

வத்ஸ! அளவற்ற வாஞ்சையுள்ள ஸ்ரீ அச்சுதன் ஸ்ருஷ்டிவைசித்ரியத்தை யாரறிவார்? நமக்கு கண்களிருக்கிறது பார்க்கிறோமல்ல!! காதுகள் இருக்கிறது. கேட்பதில்லை. அரண்மனையை நாடாதே. நீ உட்புகமுடியாது. பாதை வழியில் ஓர் குடிசையில் இரு. எத்தனை பாந்தர்கள். (வாஸ்ரூ:) உன் வீடுவந்து வெய்யிற் களைதீரத் தாக சாந்திசெய்து வாழ்த்திச்சொல்லுவர்! ஏ ஏழையே! நீ தனவந்தன்!

[illegible]

[illegible]

ஸ்ரீ:

# ஆசார்ய நிஷ்டை.

## (ஒரு சிறு கதை)

திருப்பூந்துருத்தி V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் B.A.

—:o:—

காவிரிக்கரையில் ஒரு மடந்தை மிகவும் பரபரப்புடன் தன் ஈரத் துகிலை யுடுத்துச் சுரிகுழற் கற்றையைப் பிழிந்து தறிக்கட்டுகிருள். "சுசீலா! இன்று ஏனம்மா உனக்கு இவ்வளவு பரபரப்பு?" என்கிருள் அருகில் நீராடுகிற ஒரு கிழவி.

"இன்று வேதசர்மா என்கிற தீக்ஷிதருடைய திருமாளிகையில் யாகம் ஆரம்பிக்கிருர்களாம், பாட்டி! தீக்ஷிதர் மிகவும் அன்புடன் அழைத்திருப்பதால் என்னுடைய பர்த்தா அங்கு சீக்கிரமாகப்போக வேண்டுமென்று விரும்புகிருர். அதற்கு ஆத்தில் எம்பெருமானுக்குத் தளிகை சீக்கிரமாகக் கண்டருளப் பண்ணவேண்டாமா? காவேரியிலிருந்து மற்றப் பெண்கள் போகும்போது நாமும்கூடவே போய்விட்டால் தேவலை என்று நினைத்துத்தான் கொஞ்சம் அவஸரமாகவே காரியங்களை முடிக்கிறேன் பாட்டி!" என்று சொல்லிக் கொண்டே மிகவும்அவஸரமாகத் தன்னுடைய பாத்திரங்களை சுத்திசெய்யலானுள் அப்பெண்மணி.

"நான்கூடக் கேள்விப்பட்டேன். வேதசர்மா இந்த யாகத்தை எல்லாரும் கொண்டாடும்படியாக நடத்தவேண்டு மென்று விரும்பி அதற்கான ஏற்பாடுகளெல்லாம் செய்திருக்கிருராம். யதேஷ்டமான தக்ஷிணைகளாம்! உபன்யாஸங்களாம்! ததியாராதனங்களாம்! வஸிஷ்டரே வந்து யாகத்தை நடத்திவைக்கப்போகிருராம். ஊர் முழுவதும் இதுவேதான் பேச்சாக இருக்கிறது" என்ருள் கிழவி.

இந்த ஸம்வாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தான் அருகில் நின்றுகொண்டிருந்த ஒருவன். அவன் பெயர் ஸர்வாபத்தன்,

இந்த ஸர்வாபத்தன் யார்?

பூர்வஜன்ம ஸுக்ருத விசேஷத்தினுல் ப்ராம்மண வர்ண த்தில் பிறந்து ப்ராம்மணர்கள் செய்யவேண்டும் கர்மாக்களை அறவே விட்டுவிட்டு, அந்தவர்ணத்துக்கடுக்காத துராசாரங் களைக் கைக்கொண்டொழுகிய ஒரு ப்ரம்மபந்து. ஞானமு மில்லாது ஆசார அனுஷ்டானங்களுமில்லாது ம்ருகப்ராய னுய் உதர பூரணஞ் செய்துகொண்டு திரிந்த ஓர் அதமன். ஸாத்விகர்களால் ஒதுக்கப்பட்ட ஒரு பாபி. வ்யாஸ முனிவர் தமது கதாபாத்திரத்தின் குணதிசயங்கள் அவனுடைய பெய ரில் நன்கு ப்ரதிபலிக்கவேண்டும் என்னும் விருப்பத்தினு லேயேதான் இந்தப் பெயரே அவனுக்கேற்றதெனத் திருவுள ளம் பற்றினுர்போலும்.

ஸர்வாபத்தனுடைய வரலாற்றை விஸ்தாரமாகக்கூறும் ஸ்ரீவேங்கடாசல மாஹாத்மியத்தில் அவன் வஸித்தவூர் இன் னதென்று தெளிவாகச்சொல்லப்படவில்லை. ஆயினும் அந்த வூரில் ஞானத்தாலும் ஆசார அனுஷ்டானங்களாலும் சிற ந்து விளங்கிய பெரியோர்கள் பலர் வஸித்தார்கள் என்றும் யாகங்களைச் செய்யவல்ல ப்ரபுக்களும் வேதபாரகர்களும் பலர் இருந்தார்களென்றும் தெரிகின்றது. இத்தகைய சிறப் புடையோர் பலர் வாழ்ந்தவூரில்தான் எல்லாராலும் இகழப் பட்ட ஸர்வாபத்தனும் பிறந்திருந்தான். என்ன சேராச் சேர்த்தி இது? ஸர்வக்ஞனும் ஸர்வசக்தனுமான ஈச்வரனு டைய ஸ்ருஷ்டியில் உள்ள வித்யாஸங்களுக்கு யாரால் காரணம் சொல்லமுடியும்?

காவிரிக்கரையில், ஊரில் நடக்கப்போகும் யக்ஞ த்தைப்பற்றிக் கேள்விப்பட்ட ஸர்வாபத்தன் தன்னுடைய வீடுநோக்கிப் புறப்பட்டான். வழியில் எங்குபார்த்தாலும் அந்த யக்ஞத்தைப் பற்றிய பேச்சுத்தான். "இந்தயாகத்துக் குத் திருக்குடந்தை, காஞ்சீபுரம், ஸ்ரீரங்கம் முதலிய பலவிட ங்களிலுமுள்ள வேதவித்துக்களும் ஞானவான்களும் பண்டி தர்களும் வந்திருக்கிறுர்களாமே! ஒழிந்த வேளைகளில் பெரிய பண்டிதர்களெல்லாம் வேதாந்த விஷயமாகச் சர்ச்சைகள்

செய்யப்போகிறார்களாம். உபன்யாசங்களும் ஹரிகதா காலக்ஷேபங்களுமுண்டாம். என்ன பாக்கியந்தான் செய்ததோ இந்தவூர்!" என்பது போன்ற வார்த்தைகளுக்குங் குறைவில்லை. அதிகாலையிலேயே எழுந்து ஸ்நாநாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பன்னிரு நாமங்களுடனும் துளஸீ பத்மாக்ஷமாலைகளுடனும் ஸேவையளிக்கும் பரமைகாந்திகளும், ஆற்லாத சீதள நேத்ரவாரிகளைச் சொரிந்து, உடல் புளகித்துப் பிறர்களுடைய உயர்ந்த குணங்களையே கொண்டாடிக் கொண்டிருக்கும் பாகவதோத்தமர்களும் அங்கங்கு காக்ஷியளிக்கிறார்கள்.

எவ்வளவுதான் ஞானசூன்யனுகை இருந்தாலும் ஊரில் ஏற்பட்டுள்ள பரபரப்பு ஸர்வாபத்தனுக்கும் புலனுகாமற் போகவில்லை. ஊரில் நடக்கும் யக்ஞத்தைத் தானும் காண வேண்டும் என்று விரும்பினன். யக்ஞம் என்றால் என்ன என்பதோ அல்லது அதனுல் என்ன ப்ரயோஜனம் என்பதோ அவன் அறிந்திலன். அறியவும் விரும்பவில்லை. ஆனுல் வந்தவர்களுக்கெல்லாம் யதேஷ்டமாகத் ததீயாராதனம் செய்கிறார்கள் என்றும் ப்ராம்மணர்களுக்கெல்லாம் அதிகமாக தக்ஷிணைகள் கொடுக்கிறார்கள் என்றும் கேட்டு மகிழ்ந்தான்.

மிகவும் ரமணீயமாக விளங்கிய ஓரிடத்தில் யாகசாலை கட்டப்பட்டிருந்தது. யஜமானன், ரித்விக்குக்கள், மற்றைய வேதவித்துக்கள் முதலிய எல்லோருக்கும் தனித்தனியே இடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. யூபஸ்தம்பங்கள் மிகவும் கம்பீரமாக நின்றன. யாகத்தைப் பார்க்க வந்துகூடியவர்களுக்கும் அதில் கார்யங்களுள்ள குயவன் முதலிய தொழிலாளிகளுக்கும் ப்ரத்தியேகமான விடுதிகளிருந்தன.

ததீயாராதனத்தில் வயிறு புடைக்கச் சாப்பிட்டுவிட்டு தக்ஷிணையை யுத்தேசித்து யாகசாலைக்கருகில் வந்தமர்ந்தான் ஸர்வாபத்தன். அவனைக்கண்டவுடன் அங்கு வந்து குழுமியிருந்தமற்றை ப்ராம்மணர்களுக்குள் ஒருபரபரப்புண்டாயிற்று. "இவன் ஸ்நாநம் ஸந்த்யைகளை விட்டவன். ஆசார அனுஷ்டானங்கள் கிடையாது. நெற்றியில் திருமண்காப்புக்கூடக்

கிடையாது. வெற்றிலைக் காவிபடிந்த பற்களைச் சுத்திகூடச் செய்யவில்லை, ம்லேச்சர்களுடன் பழகுகிறவன். சேரிகளில் ஸஹஜமாகப்பழகுகிறவன்'' என்றெல்லாம் பேசிக்கொண் டார்கள். எல்லோரும் தன்னையே பார்ப்பதையும், சிரிப்ப தையும் ரஹஸ்யமாகப் பேசிக்கொள்வதையும் கவனித்தான் அபத்தன். ஆனால் அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

கடைசியில் அந்தப் பிராம்மணர் கூட்டத்திலிருந்து ஒருவர் மிகவும் துணிவுடன் எழுந்திருந்து ஸர்வாபத்தனிடம் வந்து அதட்டின குரலில் "ஓய்! யாரையா நீர்! மிகுந்த துரா சாரங்களையுடைய நீர் வஸிஷ்டர்போல எல்லாருக்கும் முன் னால் வந்து உட்கார்ந்து கொண்டீர். எழுந்திருந்து பின்னால் போய் உட்காரும்'' என்றார்,

கொஞ்சமும் ஞானமில்லாதவன்தான் ஸர்வாபத்தன் ஆசார அநுஷ்டானங்களில்லாதவனென்பதும் உண்மைதான். தன்னுடைய தீயவொழுக்கங்களை யெல்லாந்தெரிந்திருக்கவே செய்தான். எவ்வளவு தானிருப்பினும் அவ்வளவு பெருங் கூட்டத்தில் வேறொரு ப்ராம்மணன் தன்னைப் பரிஹாஸம் செய்தது அபத்தனுக்கு ஸஹிக்கவில்லை. தானும் ஆசார சீலனாகி நற்பெயர் பெறவேண்டுமென்று அந்த நிமிஷமே முடிவு செய்துகொண்டான். உடனே எழுந்திருந்து யாக சாலையைவிட்டு வெளியே கிளம்பிவிட்டான்.

ஸர்வாபத்தன் திடீரென்று தன்மனதிலுண்டானவொரு உணர்ச்சியின் நிகழ்ச்சியாக யாகசாலையைவிட்டு வெளிச் சென்றவனாகையால் அவனுக்கு மேற்கொண்டு தான் செய்ய வேண்டுவதின்னது என்றவிஷயத்தில ஒன்றும் நிச்சயமேற்பட வில்லை. எனவே தனக்கெதிரில் காணப்பட்ட ஒரு திண்ணை யின்மீது அமர்ந்து யோசனை செய்யத்தொடங்கினான். அப் போது அவன் செய்திருந்த பாபங்களெல்லாம் ஒவ்வொன்றாக அவனுடைய மனக்கண்ணுக்கெதிரில் தோற்றமளித்தன. தான் பிறந்த குலமெங்கே! தான் நாடி மகிழ்ந்த சேரிப்பரத் தையர் ஸஹவாஸமெங்கே! அவர்களுடன் கூடிக்களித்த ஞான்று தான்மகிழ்ந்த வுண்டாட்டுக்களெல்லாம் இப்போது

அருவருப்பைத் தந்தன. தன்னுடைய செய்கைகளையெல்லாம் சிந்திக்குந்தோறும் தனக்கே வுடல் நடுங்கியது. மனங்குன்றியது. அந்தப்பாபங்களை யெல்லாம் கழிக்கக்கூடிய ப்ராயச்சித்தங்கள் தெரியாமல் தவித்தான். அந்தோ என்ன செய்வான்!

நாட்கள் ஒன்றிரண்டாயின. ஆயினுமென்ன ப்ரயோஜனம்? அவனுக்கு ஒன்றுந் தோன்றவில்லை. அவனுடைய அறியாமையைப் போக்கி நல்வழிக்குத் திருப்பக்கூடியவர் ஒருவரும் முன்வரவில்லை.

அகதிக்கு தெய்வமே கதியல்லவா? ஸர்வாபத்தனை ரக்ஷிக்க வேண்டுமென்று பகவான் ஸங்கல்பித்தருளினார். ஈச்வரன் ஒருவனை ரக்ஷித்தருள ஸங்கல்பித்தால், இடையர்கள் கைகளில் தடிகளை ஏந்திக்கொண்டு மாடுகளை ரக்ஷிப்பதுபோல் ரக்ஷிப்பதில்லை. எவனொருவனை ரக்ஷிக்க விரும்புகிறாரோ அவனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்தருளுகிறார். அப்படியே செய்தருளினார் ஸர்வாபத்தன் விஷயத்திலும்.

என்ன வென்னவோ யோசனை செய்துகொண்டிருந்த ஸர்வாபத்தனுக்கு ஆயிரக்கணக்கான பண்டிதர்களின் மத்தியில் அந்தப் பிராம்மணன் "வஸிஷ்டர்மாதிரி எல்லாருக்கும் முன்னால் வந்து உட்கார்ந்து கொண்டீரே! என்று கூறியது திடீரென்று ஞாபகம் வந்தது" ஆம்! வஸிஷ்டர்போல என்றானல்லவா? எல்லாரிலும் வஸிஷ்டர்தான் மிகவும் பெரியவர் என்று நிச்சயித்தான். அடுத்தபடியாகத் தான்செய்ய வேண்டுவதையும் முடிவு செய்துகொண்டான்.

ஆழ்வாரிடம் ஸ்ரீமந் மதுரகவிகள் கொண்டிருந்த நிஷ்டையைத்தான் வஸிஷ்டர் பக்கல் ஆரம்பித்தான் ஸர்வாபத்தன். "இந்தப்பரந்த உலகத்தில் வஸிஷ்டர் தவிரத்தனக்கு ரக்ஷகர் வேறு ஒருவருமில்லை அவரைச் சரணமடைந்தால் அவர் தன்னை நிச்சயமாகக் காப்பாற்றுவார்" என்னும் உறுதியோடு "வஸிஷ்டர் என்னைக்காப்பாற்றட்டும்" என்று ஜபம் செய்ய ஆரம்பித்தான்.

சரணாகதியின் அங்கங்களுள் மகாவிச்வாஸந்தான் மிகவும் ப்ரதானமானது. ஏனெனில் அது உண்டாவதுதான் மிகவும் ச்ரமம். இதைக் கணிசித்துத்தான் முன்னோர்கள் "கலம் எள் கட்டுப்போய்க் கலம் எண்ணெயாயிற்று" என்று அநுஸந்தித்தார்கள் என்றார் ஸ்ரீ தேசிகன். நற்கதியடையும் காலம் நெருங்கிவிட்டபடியால் ஸர்வாபத்தனுக்கும் இப்படிப் பட்ட விச்வாஸம் உண்டாகியது. "விதிவாய்க்கின்று காப்பாரார்"?

ஸர்வாபத்தன் ஜபம் செய்ய ஆரம்பித்து நாட்கள் மாஸங்களாகி மாஸங்களும் வருஷங்களாயின. இடையூறுகளும் பலவுண்டாயின. ஆயினும் ஸர்வாபத்தன் தன்னுடைய ஜபத்தை மாத்திரம் நிறுத்தவில்லை.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சா
ரெவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்"

என்றபடி தனக்குண்டான கஷ்டங்களையும் அவமதிப்பையும் பொருள் செய்யாமல் தன்னுடைய நிஷ்டையிலேயே முனைந்திருந்தான்.

உலகத்தில் திர்யக்குகளாக இருந்தால்கூட ஒருவன் தன்னைச்சரணமாக அடைந்து விட்டால் அந்தச்சரணாகதனைக் காப்பாற்றியே தீருகிறது. ஸ்ரீமத் ராமாயணத்தில் உதாஹரிக்கப்பட்டுள்ள *கபோதோபாக்யானத்தைக்காட்டில் இதற்கு வேறோர் நிதர்சனம் வேண்டுமோ? கேவலம் திர்யக்குகளாக இருப்பவற்றுக்கும் சரணாகத ரக்ஷணத்தில் இவ்வளவுத்வரையிருக்குமானால் சக்ரவர்த்தித் திருமகனுக்கும் ஆசார்யனாக இருக்கும்பெருமையைப்பெற்ற வஸிஷ்டமுனிவரைப்பற்றி கேட்கவேண்டுமோ?

வஸிஷ்டர் ஸர்வாபத்தனை ரக்ஷிக்கத் திருவுள்ளம் பற்றிவிட்டார். ஆனால் எவ்வாறு ரக்ஷிப்பது?

ஒருநாள் வஸிஷ்டர் ஸத்யலோகத்தில் ப்ரம்மாவினுடைய ஸதஸ்ஸுக்குச் சென்றார். அங்கு ஒருபெரிய ஸபையில் தேவச்ரேஷ்டர்களும் ரிஷிகளும் அப்ஸரஸ்ஸ்த்ரீகளும் புடைசூழ

* புரு. (இதன் தொடர்ச்சி ராப்பர் 3-ம்பக்கம் பார்க்க.)

ளோ ? 'சுபாநும்' லக்ஷ்மீ முதலிய சுபைகளான மஹிஷிக ளுக்கும் ஸூசனம். ஸாத்வதர் (யதுவம்சத்தினர்) களுடைய த்வாரகாத்வீபம் ஸத்வமே நிறைந்த ச்வேதத்வீபம் போன்றது. இரண்டு த்வீபங்களிலும் ஸாத்வதர் வஸிப்பது. 'நிவேதிதஸமாஹூத:' 'நிவேதயத மாம் க்ஷிப்ரம்' என்று விபீஷணரைப்போலப் பெருமாள் திருவடி ப்ராப்தியே பய னுகக் கோரி வந்த சரணுகதனல்ல. வந்ததை மட்டும் தெரி விக்கச் சொன்னவனென்று 'நிவேதித'சப்தத்தால் அழகாக வ்யஞ்ஜனம். 'ஆர்த்தோ ஜிக்ஞாஸு:' என்று பாடிய அதிகா ரிகளில், இவன் முதல்வன். ஆர்த்தன் 'விபீஷணர்' ஞானி யென்னும் மேல்அதிகாரி. இவன் 'யாவதுயிகார...' ஸூத்ர த்திற் கூறிய மோக்ஷாதிகாரியானுலும் த்ரைலோக்ய ராஜ்யா திகாரிக்புருஷனுகையால் மோக்ஷவிளம்பமேயுள்ளது. இதை மேலே ஸ்பஷ்டமாக ஸாதிக்கப்போகிருர் 'ப்ராஸாதம் ப்ரா விசத்' ப்ரஹ்மத்தின் பதத்திற்கு வந்தும் அவர் ஸாமீப்யம் பெற்றும், அவர் வாஸ க்ருஹத்தில் நுழைந்தானே யல்லது அவருக்குள் ப்ரவேசிக்கும் பாக்யமின்னும் வரவில்லை ப்ர ஸாதம் நீளுமிடம் ப்ராஸாதம். தேவதாயதனம் ப்ராஸாதமா கும்'ப்ரஸீததி அஸ்மின் தேவதா'என்று வ்யுத்பத்தி. கண்ண னெங்கிருந்தாலும் ஸர்வதா ஸுப்ரஸன்னராகையால், அவர் வஸிக்குமிடத்தை 'ப்ராஸாதம் என்று பேசத் தடையில்லை. 'ப்ரவிச்ய த்வாரகாம் ஸோzத ஸமேத்ய ஹரிணா தத:' என்ற பராசரர் ச்லோகமிங்கே ஸூசிதம்.

ஸ தேந விஹிதாம் ஶக்ர: ப்ரதிக்ருஹ்ய ப்ரியார்ஹணாம் ।
நிஜகாத நிஜாம் ப்ரீதிம் கத்கதோத்கயா கிரா ॥ ௨௩ ॥ [ணாம்

**ஸ தேந விஹிதாம் சக்ர: ப்ரதிக்ருஹ்ய ப்ரியார்ஹ**
**நிஜகாத நிஜாம் பீதிம் கத்கதோத்கயா கிரா ॥23**

ஸ: சக்ர:- அந்த இந்திரன், 'தேந', 'தத்' என்ற பதத்திற்கு வாச்யனுன க்ருஷ்ணனுல், விஹிதாம் செய்யப்பட்ட, ப்ரியா ர்ஹணும்- ப்ரீதி நிறைந்த பூஜையை, ப்ரதிக்ருஹ்ய-பெற்றுக்

கொண்டு, கத்கதோத்கமயா- தட்டுத்தடுமாறிக் குளறி வரும், கிரா- பேச்சினால், நிஜாம் பீதிம்- தன்னுடைய பயத்தை நிஜகாத- விளக்கினான்.

(தா-ம்)ஹரியின்ப்ராஸாதத்தில் நுழைந்தான். ப்ரவேசிக்கும் போதே ப்ரியமாகச்செய்த பூஜையைப் பெற்றான் 'ஸ: தேந' அப்படி ஆர்த்தனாய் ப்ராஸாதத்தை யாசித்து வந்தவன், அந்த ப்ரபுவினால் ப்ரீதியோடு பூஜிக்கப்பட்டான். 'ப்ராவிசத்' என்ற மூன் ச்லோகத்தின் முடிவிற் கூறி, நுழையும் போதே பூஜிக்கப்பட்டானென்பதை வ்யஞ்ஜனம் செய்கிறார். 'ப்ராஸாதம் ப்ரபோ:' உதார ப்ரபுவின் தயாப்ரஸாதத்தை அர்த்தித்து வந்த அர்த்தியை ப்ரபு பூஜிக்கிறார். அர்த்தியல்லவோ உதாரன் என்று பூஜிக்கிறார். இவனல்லவோ 'ப்ரபு' என்று ப்ரபு நினைத்துப் பூஜிக்கிறார். 'ப்ரதிக்ருஹ்ய' ப்ரஸாதத்தை யாசித்து ப்ரதிக்ரஹிக்கப் போகிறவன், இந்த அர்ஹணைக்கு நானர்ஹனல்ல யாசித்து வரும் ஸமயம். பயம் நீங்கக் கால் பிடிக்க வந்தவன் பூஜிக்கப்படும் ஸமயமல்லவென்று தடுத்தும், 'ப்ரியார்ஹணை' ப்ரியன் ப்ரியனுக்குச்செய்யும் பூஜையென்று ப்ரபு நிர்பந்தித்துப் பூஜையை ப்ரதிக்ரஹித்தானென்பது 'ப்ரதிக்ருஹ்ய ப்ரியார்ஹணாம்' என்று சேர்த்துப்படிப்பதால் வ்யஞ்ஜிதம். 'ப்ரியோஹி ஜ்ஞாநிநோத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' ப்ரியன் ப்ரியனுக்குச் செய்யுமுபசாரம் 'ப்ரிய: ப்ரியஸ்யார்ஹஸி தேவ ஸோடும்' என்று கண்ணன் பேசி நிர்பந்திப்பது வ்யஞ்ஜிதமாகிறது. 'யதா ப்ரியாதிதிம் மித்ரம்.'

𑌦𑌯𑌨𑍀𑌯𑍇𑌷𑍁 𑌦𑍇𑌵𑍇𑌷𑍁 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵 𑌤𑍍𑌵𑌯𑌾𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌅𑌪𑌾𑌙𑍍𑌗𑌾𑌃 𑌪𑌰𑌿𑌪𑌾𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌮𑌨𑍁𑌕𑍍𑌰𑍋𑌶𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌃 ॥ ௨௪

தயநீயேஷு தேவேஷு தேவதேவ த்வயாऽதுநா ।
அபாங்கா:பரிபாத்யந்தாமநுக்ரோசாநுவர்த்திந: ॥

(ப-ரை)தேவதேவ- தேவர்க்கும் தேவரே! த்வயா உம்மால், அதுநா-இப்பொழுது,தயநீயேஷு-இரக்கப்படவேண்டியவரான, தேவேஷு-தேவர்கள்மீது, அநுக்ரோசாநுவர்த்திந:-தயையைப்பின்தொடரும், அபாங்கா:-கடைக்கண் கடாக்ஷங்கள், பரிபாத்யந்தாம்-நிரம்பச் செலுத்தப்படவேணும்.

(கா-ம்) 'தேவதேவ' 'தேவர்க்கும் தேவா ஓ' என்று ஆழ்வார் கூப்பிடுபோல மனிசருக்கு நாங்கள் தேவர்கள், தேவர்களுக்கு தேவர் தேவர். நீர் நரலோகத்திலிருந்தாலும் நீர் தேவதேவர். 'தயநீயேஷு தேவேஷு' தேவர்கள் தயையை உலகம் வேண்டும். தேவர்தயையை தேவர்கள் வேண்டுகிறார்கள். 'தயநீயஸ்தவ நாத' என்கிறான். முதல்வார்த்தையாலேயே தயாபேக்ஷையை விளக்குகிறான். பூஜையிருக்கட்டும், தயைக்கு வந்தேன். தயையை அநுவர்த்திருக்கும் அபாங்கங்கள் விழவேணும். 'அபாங்கா: பரிபாத்யந்தாம்' அபாங்கவீக்ஷணங்கள் விழச்செய்தால், 'சத்ருக்கள் அபாங்கராய்(அங்கமிழந்தவராய்)வீழ்விக்கப்படட்டும் என்றும்த்வநி.

𑌸𑍁𑌷𑍁𑌵𑍇 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌭𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌹𑍍𑌲𑌾𑌦𑌸𑌂𑌮𑍁𑌖𑌮𑍍 ।
𑌰𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌮𑌿𑌹 𑌦𑍀𑌨𑌾𑌨𑌾𑌂 𑌰𑌤𑍍𑌨𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌮𑌿𑌵 𑌦𑍇𑌵𑌕𑍀 ॥ ௨௫ ॥

**ஸுஷுவே நரஸிம்ஹம் த்வாம் பக்தப்ரஹ்லாத**
**[ ஸம்முகம் ।**
**ரக்ஷார்த்தமிஹ தீநாநாம் ரத்னஸ்தம்பமிவ**
**தேவகீ ॥ 25 ॥**

(ப-ரை) 'பக்த ப்ரஹ்லாத ஸம்முகம்- பக்தர்களுக்கு ப்ரக்ருஷ்டமான ஸந்தோஷத்தையளிப்பதற்குக் காத்திருக்கும் சீலமுடைய, (பக்தரான ப்ரஹ்லாதரிடம் வத்ஸலரான) நரஸிம்ஹம் - புருஷச்ரேஷ்ட (நரஸிம்ஹ)னே, ரத்னஸ்தம்பமிவ-ஹிரண்யனரண்மனை ரத்னத்தூண்(பெற்றது போல) த்வாம்-உம்மை, தேவகீ - தேவகீதேவி, இஹ-இப்புவியில், தீநாநாம் அநாதர்களுடைய ரக்ஷார்த்தம் - ரக்ஷைக்காக, ஸுஷுவே-பெற்றாள்.

(தா-ம்) 'ஸுஷுவே' பெற்றுளென்பதை முதலிலும் 'தேவகீ' என்பதை முடிவிலும் வைப்பது ரஸம். 'பெற்றாள் தேவகீ' 'பிறந்தவாரும் என்பதை' முதலிலே வைக்கிறார். 'கௌஸல்யா லோகபர்த்தாரம் ஸுஷுவே யம் மநஸ்விநீ' என்பதை நினைவூட்டி ராமனாக அவதரித்ததும் நீரே என்று ஸூசிக்கிறார். 'நரஸிம்ஹனாக அவதரித்ததுமட்டுமல்ல, ராமனும் நீரே. நரஸிம்ஹம் த்வாம்' என்பதோடு 'நரஸிம்ஹம் ராமம் த்வாம்' என்று சேர்த்துக்கொள்ளவேணுமென்று வ்யஞ்ஜனம். ஸுஷுவே என்றபதத்தால் ராமாயணச்லோகத்தை ஞாபகப்படுத்துகிறார். மாககாவ்யத்தில் நாரதர் முதல் ஸர்கத்தில் ந்ருஸிம்ஹாவதாரத்தையும் ராமாவதாரத்தையும் பேசி அவரே நீரென்று துதித்தது போல ராஜஸூயஸபையில் பீஷ்மர் முன்னவதாரங்களை வர்ணித்து அவரே க்ருஷ்ணனென்று பேசியது போல 'நரஸிம்ஹம் த்வாம்" காலே ந்ருஸிம்ஹ' என்று ருக்மிணீ கடிதமெழுதினாள். நீரே ந்ருஸிம்ஹனென்பதற்கு அவள் ப்ரணயலேகம் சான்று. லக்ஷ்மீந்ருஸிம்ஹனை லக்ஷ்மி அறியாளோ ? பர்த்தாவின் வேஷமெப்படி மாறினாலென்ன ? 'ப்ரஹ்லாதார்த்தம் ந்ருஸிம்ஹம்' பக்தப்ரஹ்லாதார்த்தமந்த அவதாரம். இந்த அவதாரமும் பக்தப்ரஹ்லாதார்த்தமே யென்று ரஸம்'. 'பரித்ராணாய ஸாதூநாம்' என்னும் அவதார நிமித்தத்தை நீ மறுக்கமுடியுமோ. ப்ரஹ்லாதனைப்போன்ற ஸர்வோத்தமஸாதுவல்லாமற்போனாலும் நாங்களும் 'ஸாதூநாம்'என்றுதேவர் கூறும் ஸாதுக்களில் சேர்ந்தவரென்றுதானே உம் நினைப்பு. 'ரக்ஷார்த்தம்' ,பரித்ராணாய' 'நீசாநாம்' ஸாதுக்களல்ல வென்றாலும் கார்ப்பண்யத்தில் குறைவில்லை. அநந்யகதிகர்கள், அகிஞ்சனர், ப்ரஹ்லாதனைப்போன்ற பக்தரல்லாவிடினும் தீநத்தன்மையில் குறைவில்லை. அது பூர்ணம். 'தேவகீ தநுஜஸ்தூணா' என்ற ச்லோகத்தையும் நினைக்கவேணும்.

(336ம் பக்கம் தொடர்ச்சி.)

உயர்ந்த அரியாஸனமொன்றில் அமர்ந்திருந்த தம்முடைய பிதாவும், லோகஸ்ரஷ்டாவுமான பிதாமஹக்கடவுளை வணங்கினர். அவரைப் பல்வேறு ஸ்துதிகளால் ஸ்துதித்தார்.

தமது நன்மைகளைக்கண்ட நான்முகனும் சொல்லொணுத வுவகையெய்தி அவருக்கு நல்வரவு கூறியழைத்து, குசலங்கள் விசாரித்து அவரோர் இருக்கையிலமர்ந்தபின் ஸத்யலோகத்துக்கு வந்தகாரணத்தை வினவினர்.

வஸிஷ்டர் அன்புடன் வினவிய தமது தந்தையைநோக்கி "ஐயனே! நானேர் ராஜபுரோகிதன். ராஜாக்கள் செய்யும் பாபங்களத்தனையும் புரோஹிதனைச் சாருமன்றே? இது போதாததற்கு ஸர்வாபத்தன்என்னும் ஆசாரஹீனனுகிய ஒரு ப்ராம்மணன் என்னை ஆச்ரயித்துள்ளான். எங்களிருவருடைய பாபங்களையும் போக்க வல்லதொரு உபாயத்தைச் சொல்லியருள வேண்டுமென்று" ப்ரார்த்தித்தார்.

நான்முகன் சற்று யோசித்து, "நல்லது பூமியிலே கடுவினையரிருவினையுங் கடிவதும் தெளிந்த பெருந்தீர்த்தங்கள் செறிந்ததுமான திருவேங்கடமென்னுந் திருமலை யொன்றுள்ளது. லோகநாயகராகிய திருவேங்கடமுடையான் அங்கு ஸந்நிஹிதராக இருந்துகொண்டு உலகத்தையெல்லாம் வாழ்வித்து வருகிருர். அந்த மலைக்குச் செல்லுங்கள். சென்று அங்குள்ள பரமபவித்ரமானதும், கோணதீர்த்தம் என்றும தும்புதீர்த்தம் என்றும் ப்ரஸித்தியுடையதுமான திவ்ய தீர்த்தத்தில் மீன மாஸத்தில் மதிநிறைந்த நன்னளில் நீராடுங்கள். உங்களுடைய பாபங்களெல்லாம் போய்விடும். பின்பு திருவேங்கடமுடையானைத் திருவடித்தொழுதால் பரம புருஷார்த்தம் வரையிலுள்ள ஸர்வாபிஷ்டங்களையும் கொடுத்தருள்வான்" என்ருர்.

தமது தந்தையுரைத்த வார்த்தைகளைக்கேட்ட வஸிஷ்டமுனிவர் பரமானந்த பரிதரானுர். அங்கிருந்து

"குன்றமேந்திக் குளிர்மழை காத்தவ
னன்று ஞாலமளந்த பிரான் பரன்
சென்றுசேர் திருவேங்கட மாமலை
யொன்றுமேதொழ நம் வினைபோயுமே!"

என்றநுஸந்தித்துக்கொண்டே கிளம்பினுர்.

ஸர்வாபத்தனையும் அழைத்துக்கொண்டு திருமலைக்கு யாத்திரையாகக் கிளம்பிய வஸிஷ்டர் அங்குள்ள புண்ணிய தீர்த்தங்களிலெல்லாம் நீராடினார். "வேங்கடத்துக் கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே!" என்று பெரியோர்கள் அத்யவஸித்த ஸ்வாமி புஷ்கரிணியில் நீராடினார். ஆகாச கங்கையில் ஆடினார். பாபவினாசமென்னும் புண்ய தீர்த்தத் திலும் ஸ்நானம்செய்து அகமர்ஷணங்கள் ஜபித்தார். இவ் வாறு தீர்த்தங்களொன்றும் விடாது எல்லாவற்றிலுமாடிய பின்பு கடைசியாகப்பங்குனியில் உத்தர பல்குனித் திருநாளில் கோண தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தார். செய்து தமது தந்தை நியமித்தபடியே அகலகில்லே னிறையுமென்று அலர் மேல்மங்கை யுறையுந்திருமார்பனது திருவடிமலரை வணங்கி எழுந்தார். ஆபாதசூடம் ஸேவித்தனுபவித்தார். எம்பெருமா னுடைய வடிவழகில் ஈடுபட்டுப் பலவகையாக ஸ்துதித்தார்.

வஸிஷ்டருடைய ஸ்தோத்திரத்தால் ப்ரீதனாகிய எம் பெருமான் அங்கு ப்ரத்யக்ஷமானார். ப்ரத்யக்ஷமாகி அவ்விரு வரையும் அநுக்ரஹித்தருளினார். ஸர்வாபத்தனுடைய பாப ங்களை யெல்லாம் போக்கி "இன்று முதல் இவன் ஸர்வஸித்த னென்று எல்லாராலும் கொண்டாடப்படுவான். அறிவு, திரு, ஆற்றல் முதலிய எல்லாப்பெருமைகளும் இவனுக்குண் டாகும்" என்று அருளிச்செய்துவிட்டு மறைந்தருளினார்.

ஸர்வஸித்தனும் வஸிஷ்டருடைய அவலம்பத்தால் தன க்கு ஏற்பட்ட நன்மைகளை எல்லாம் நினைத்து நினைத்து மகிழ்ந்தான்.

"மாருய தானவனை வள்ளுகிரால் மார்விரண்டு
கூறாகக்கீறிய கோளரியை—வேறாக
ஏத்தியிருப்பாரை வெல்லுமே மற்றவரைச்
சாத்தி யிருப்பார் தவம்."

---

ப்ரசுரித்தது: பரவஸ்து ஸ்ரீ நிவாஸாசாரியர், தில்லஸ்தானம் B.O, (via) திருவையாறு.
அச்சிட்டது:- S. விஜயராகவன், ஸ்ரீநிவாஸ பிரஸ், திருவையாறு